2010 நவம்பர் 8] [பேரவைத் தலைவர்]

திரு. மூ. மாரிமுத்து அவர்கள் சேலம் மாவட்டம், தலைவாசல் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. அ. வெங்கடாசலம் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும், 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலும் நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும் 19–5–2001 முதல் 26–6–2001 வரை தமிழக அமைச்சராகவும் சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 9–35

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். திரு. டி. சுதர்சனம், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

"திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதியிலிருந்து 2006 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், இப்பேரவையில் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் திறம்படப் பணியாற்றியவரும், கட்சி அரசியலுக்கு

அப்பாற்பட்டு அனைத்துத் தரப்பு மக்களின் அன்பையும் பாசத்தையும் பெற்றவரும், அரசியல் நாகரிகத்தோடும், கண்ணியம் மிகுந்த பண்பாட்டோடும் அனைவரிடமும் நெருக்கமாகப் பழகக்கூடிய நல்லியல்பு கொண்டவரும், மக்கள் பாராட்டிப் போற்றும்வண்ணம் பொதுப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு சீரிய முறையில் பணியாற்றியவரும், சிறுவயது முதல் காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு உயரிய தொண்டாற்றியவரும், 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலும், பூந்தமல்லி தொகுதியிலிருந்தும், 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை திருவள்ளூர் தொகுதியிலிருந்தும், மீண்டும் 2006 ஆம் ஆண்டு முதல் பூந்தமல்லி தொகுதியிலிருந்தும் தொடர்ந்து நான்கு முறை தமிழக சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. டி. சுதர்சனம் அவர்கள், 26–6–2010 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஆ) உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. எஸ். ஜெயபால், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

"கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியிலிருந்து 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், இளமைப் பருவம் முதல் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்து பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தவரும், மக்கள் பாராட்டும் வகையில் சிறப்பான முறையில் பணியாற்றியவரும், இனிய பண்புகளைக் கொண்டவரும், அனைவரிடமும் அன்பாகப் பழகக்கூடியவரும், அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவரும், சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவருமான திரு. எஸ். ஜெயபால் அவர்கள், 25–7–2010 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.